JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190//2020 |
| | : | Prosecution PW -- 7 |
| NAME | : | மருத்துவர் சுஜித்ரா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 30.08.2023

முதல் விசாரணை :-

நான் தற்போது திருநெல்வேலி மாவட்ட தொற்று நோய் தடுப்பு அலுவலராக பணி புரிந்து வருகிறேன் கடந்த 2019 ம் ஆண்டு நான் தென்காசி அரசுமருத்துவமனையில் அவசர சிகிச்சையில் மருத்துவ அலுவலகராக பணி புரிந்த போது 29.05.2019 ம் தேதி மாலை நான் பணியில் இருந்தபோது கீழப்பாவூர் அம்மன்கோவில் தெருவை சார்ந்த ஆறுமுகபாண்டி என்பவரின் மனைவி பூபதி வயது 50 என்பவரை சிகிச்சைக்காக அவரது மகன் சிவனேசன் அழைத்து வந்திருந்தார். 29.05.2019 ம்தேதி 3.30 மணியளவில் தான் வீட்டில் வைத்து தன்னை அடையாளம் தெரிந்த இரு நபர்கள் அரிவாள் கொண்டு தலை, வலதுதோள் பட்டை, மற்றும் இடது காதில் தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது

1. தலை Temporal பகு தியில் 3x1 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.
2. வலது தோள் பட்டையில் 2x1 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.
3. இடதுகாதில் 1x1 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிசிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்தேன்.

அவருக்கு தலையில் CT பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் எவ்விதமான எலும்பு முறிவோ உள்காயங்களோ இல்லை. பின்பு அவரை 03.06.2019 ம் தேதியன்று மருத்துவமனையில் இருந்து discharge செய்யப்பட்டார். இதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்ககிறேன். அந்த காயச்சான்று அசாஆ 6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார்என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பில் குவி</u>**

காயம்பட்டவர் சம்பவம் நடத்தாகசொல்லப்பட்ட நேரத்தில் இருந்து ஒன்றரை மணி நேரம் கழித்து தான் சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அசாஆ 6 காயச்சான்றில் சம்பவம் நடத்தாக சொல்லப்பட்ட நேரம் 4.00 மணி என்ற எழுதப்பட்டதை அடித்து 3.30 மணி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 6 ல் காயம்பபட்ட நபர் அடையாளம்தெரிந்த இரண்டு நபர்கள் தாக்கியதாக சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய போலிஸ் விசாரணையில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் கம்பால் தாக்கியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் இரண்டு நபர்கள் அருவாளலால் தாக்கியதாக சொன்னேன். காயம்பட்ட நபருக்கு வெட்டு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் cutinjury என்று சொல்லமுடியாது laceration ஆக இருந்தது. அசாஆ 6 ன்படி காயம்பபட்ட நபர் 108 ஆம்புலன்சில் வந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக அசாஆ 6 ல் துலங்காது என்றால் சரிதான், ஆனால் பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்ததாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தபோது அரிவாளை காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் ஒரு நபர் பைக்கில் பின்னால் அமர்ந்து செல்லும் போது பின்னால் இருப்பவர் நிலைதடுமாறி கீழே கற்கள் மீது விழும் போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால்சரிதான்.

//Sd// - மருத்துவர் சுஜித்ரா

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi